திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, நன்னிலம் ஒன்றியத்தின் முன்னாள் பெரும் தலைவர்மீது எந்தவிதமான குற்றமும் இல்லை. அந்த ஒன்றியத்தைக் கலைப்பதற்கு முன் அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. குறிப்பாக, ஒன்றியத் தீர்மானங்களை ஆர்வத்தோடு நிறைவேற்றி செயல் பட்டார். அவருடைய பெருமுயற்சியால் சிறப்பாகச் செயல்பட்ட ஒன்றியங்களில் நன்னிலம் ஒன்றியமும் ஒன்று. அவர்மீது அப்படி ஏதாவது குற்றச்சாட்டு இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்திருக்கிறார் என்று சொல்லி, நடவடிக்கையும் எடுக்காமல், அவருக்கு ஒன்றியக் குழுவில் இடமளிக்காமல் இருப்பது எந்தவகையிலும் சரியல்ல. குழுவில் அங்கம் வகிக்க அனுமதி அளிக்க வேண்டும் அல்லது அவர் தவறு செய்திருந்தால் உடனடியாக அவர்மீது நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்மீது வேறு பல புகார்கள், கான்ட்ராக்ட் சம்பந்தப்பட்ட புகார்கள் எல்லாம் இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் இல்லாமலிருந்தால் உரிய நடவடிக்கை எடுப்பதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1978 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.